மின்னிதழ் E-paper
ஈழநாடு
Eelanadu
05.07.2020 சனிக்கிழமை


# சிறைகளுள் வேட்டை: 1,102 கைபேசிகள் மீட்பு!

கொழும்பு, ஜூலை 05
நாடளாவிய ரீதியில் கடந்த 4 வாரங்களாக சிறைச்சாலைகளில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புக்களில் 1,102 கையடக்க தொலைபேசிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.
அத்துடன் 688 சிம் அட்டைகளும், 283 சார்ஜர்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாகச்

02

# கூட்டமைப்பின் தலைவர் குறித்து பின்னர்தான் புரிந்துகொண்டேன்

## கிழக்கு மக்கள் சந்திப்பில் விக்கி தெரிவிப்பு



மட்டக்களப்பு, ஜூலை 05
சம்பந்தன் என்னுடைய நண்பர். அவர்தான் என்னை அரசியலுக்குக் கொண்டு வந்தார். ஆனால் அவருடைய பார்வை வித்தியாசமாக இருந்தது. அதனை நான் முன்பே கண்டுகொள்ளவில்லை. பின்னர்தான் கண்டுகொண்டேன் என்று முன்னாள் வடக்கு முலமைச்சரும் ஓய்வு பெற்ற நீதியரசரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
மட்டக்களப்பில்

02

# எம் பின்னால் இந்தியா எப்போதுமே நிற்கிறது

## திருமலை மக்கள் சந்திப்பில் சம்பந்தன் நேற்றுத் தகவல்



திருமலை, ஜூலை 05
தமக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் ஆதரவு உள்ளது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் வேட்பாளருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

02

# திட்டமிட்டபடி பொதுத்தேர்தல்!

## மஹிந்த தேசப்பிரிய தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 05
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றின் இரண்டாவது அலை ஏற்படும் எனத் தாம் நம்பவில்லை என்றும், எனவே பொதுத்தேர்தல் திட்டமிட்டபடி நடைபெறும் என்றும், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

02

# சு.கவிலிருந்து விலக மைத்திரிபால முடிவு

கொழும்பு, ஜூலை 05
எதிர்வரும் பொதுத் தேர்தலுக்குப் பின்னர் கட்சி சார் பதவிகளில் இருந்து விலகுவதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.
களுத்துறையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றிலேயே அவர் இதனை கூறினார்.
அவர் மேலும் கூறுகையில், சிலர் கட்சி வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவித்த போதிலும் அவ்வாறான ஒரு

02

# ஏழு பேருக்கு அழைப்பாணை!

கொழும்பு, ஜூலை 05
ராஜித சேனாரத்ன, ரஞ்சித் மத்தும பண்டார, ரஞ்சன் ராமநாயக்க உள்ளிட்ட கடந்த அரசின் அமைச்சர்கள் உள்ளிட்ட 7 பேருக்கு அரசியல் பழிவாங்கல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.
வடமேல் கடற்படை கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் டி.கே.பி. திஸாநாயக்கவால் இந்த ஆணைக்குழுவில் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பில்

02

# தமிழர் தரப்பு அபிவிருத்திக்கு என்றும் எதிரானவர்களல்லர்!

## மக்கள் சந்திப்பில் சிறிதரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 05
தமிழர் தரப்பு அபிவிருத்திக்கு என்றும் எதிரானவர்கள் அல்லர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ். தேர்தல் மாவட்ட வேட்பாளருமான சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

02

# 2,165 பேர் மாட்டினர்!

கொழும்பு, ஜூலை 05
கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு 12 மணி முதல் மறுநாள் வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12 மணி வரையிலான 24 மணிநேர சுற்றிவளைப்புத் தேடுதல்களில், 2 ஆயிரத்து 165 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
போதைப்பொருள், ஆயுதங்கள், வெடிபொருள், சட்டவிரோத மதுபானம் வைத்திருந்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இந்தச் சந்தேகநபர்கள்

02

# உள்நாட்டு வெடிபொருள் வெடித்துச் சிதறி விபத்து!

## இயக்கச்சியில் ஒருவர் படுகாயம்

கிளிநொச்சி, ஜூலை 05
நாட்டு வெடிபொருள் தயாரித்த ஒருவர், வெடி விபத்து ஏற்பட்டு படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி

02

## கொரோனா நிலவர அறிக்கை

| தொற்றாளர் | புதிய தொற்றாளர் | சிகிச்சை பெறுவோர் | சந்தேகநபர்கள் | குணமடைந்தோர் |
|---|---|---|---|---|
| 2,074 | 05 | 178 | 46 | 1,885 |

இறப்பு 11

மூலம் : சுகாதார மேம்பாட்டு பணியகம்

## கூட்டமைப்பின்...

நடைபெற்ற பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு- கிழக்கு மாகாணத்தின் ஏகோபித்த தலைவர் என்ற வகையில் சம்பந்தன், கிழக்கு மாகாணத்தில் இருந்து வந்த ஒரு தலைவர். இவ்வாறானதொரு விடயம் நடைபெற இடம் கொடுத்துவிட்டார் என்பது மனதுக்கு பெரும் வேதனையாக உள்ளது.

சம்பந்தன் என்னுடைய நண்பர்.

## தமிழர் தரப்பு...

மிருசுவில் பகுதியில் இடம்பெற்ற மக்களுடனான சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தமிழர்கள் தம்மைத்தாமே இந்த மண்ணிலே ஆள வேண்டும் என்பதற்காக நாம் 70 ஆண்டுகாலமாக போராடி வருகிறோம். கோட்டாபயவின் அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர், தமிழர் பொருளாதார ரீதியிலான பிரச்சினைகளுக்காகத்தான் தமிழர்கள் போராடினார்கள், பொருளாதார ரீதியான பிரச்சினைகள் தீர்க்கப்படுமானால் அவர்கள் போராடமாட்டார்கள் என்றும், தமிழ்த்தலைமைகள் அபிவிருத்திக்கு எதிரானவர்கள் என்றும் கருத்துக் கூறியிருந்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் காலத்தில் அரசுடன் பேச்சுக்களில் ஈடுபடும்போது எமது மக்களின் பொருளாதார அபிவிருத்தி தொடர்பாகவும் எமது மக்களின் இயல்பு நிலை முன்னேற்றம் தொடர்பாகவும் பேசியிருந்தார்கள். அதைத் தலைவர் நேரடியாக ஊடகவியலளார் சந்திப்பில் கூட தெரிவித்திருந்தார்.

சுனாமி வேளையில் சிரான் என்கின்ற பணியகத்தை நிறுவி அதனூடாகச் சர்வதேசத்தின் ஒத்துழைப்புடன் எமது மக்களின் பொருளாதார வாழ்வை முன்னேற்றுவதற்காக முயன்றவேளை அப்போது இருந்த சந்திரிகா அரசினால் முட்டுக்கட்டை போடப்பட்டது.

ஆகவே சிங்கள பேரினவாத அரசுதான் தமிழ்மக்கள் தாமாகவே பொருளாதாரத்தை மேம்படுத்த தடையாக உள்ளதே தவிர தமிழ்த்தலைமைகள் எப்போதும் எங்கள் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தடையாக இருந்தது கிடையாது.

எமக்கு நிலையான அரசியல் தீர்வு கிடைக்கப் பெறுமானால் எமது மக்கள் தாமாகவும் புலம்பெயர் உறவுகளின் ஒத்துழைப்புடனும் எமது தேசத்தை கட்டியெழுப்புவர்.

இன்று எமது இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகள் என்பது மிகவும் பிரச்சினையாக இருக்கிறது. நிலையான அரசியல் தீர்வு கிடைக்கப் பெற்றால் இவை எமக்கு ஒரு பிரச்சினையே இல்லை. ஏனெனில் தமிழீழ விடுதலைப் புலிகள் காலத்தில் எமது இளைஞர்களுக்கு வேலை இல்லாத பிரச்சினையே இல்லாமல் இருந்தது. சேரன் சுவையூற்று, பாண்டியன் சுவையூற்று, வருவாய்ப்பகுதி, ஆயப்பகுதி, வைப்பகங்கள் என்பவற்றினூடாக எமது மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கியிருந்தார்கள்-என்றார்.

இந்தச் சந்திப்பில் வேட்பாளர்களான எம்.ஏ.சுமந்திரன், நாடாளுமன்ற வேட்பாளர் சசிகலா ரவிராஜ், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சயந்தன் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

அவர்தான் என்னை அரசியலுக்குக் கொண்டு வந்தார். ஆனால் அவருடைய பார்வை வித்தியாசமாக இருந்தது. அதனை நான் முன்பே கண்டுகொள்ளவில்லை. பின்னர்தான் கண்டுகொண்டேன்.

நான் 2013ஆம் ஆண்டு அரசியலுக்கு வந்தேன். 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் புதிய நல்லாட்சி அரசு வந்தது. அப்பொழுது பெப்ரவரி 3ஆம் திகதி கொழும்பிலுள்ள என்னுடைய வீட்டிற்குச் சம்பந்தனும் சுமந்திரனும் வந்தார்கள். கதைத்துவிட்டுச் செல்லும்போது தம்பி நாளைக்கு பெப்ரவரி 4ஆம் திகதி சுதந்திர தின விழா. நான் அதில் கலந்து கொள்கிறேன் நீங்களும் வருவீர்களா? என்று கேட்டார்.

எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. நான் சொன்னேன். நான் வரவில்லை. நீங்கள் போவதாக இருந்தால் செல்லுங்கள் என்றேன். இல்லை இல்லை. நாங்கள் இந்தக் காலகட்டத்தில் அவர்களுடன் சேர்ந்து பயணிக்க வேண்டிய ஒரு அவசியம் இருக்கின்றது. ஆகவே இந்தச் சுதந்திர தின விழாவிலர் கலந்து கொள்கிறோம் என்று.

நான் அவர்களுக்குச் சொன்னேன். 1958 ஆம் ஆண்டு கெடற் (சாரணர் ஆரம்ப நிலை) என்ற முறையிலே சுதந்திர தினவிழாவில் பங்குபற்றினேன்“அதற்குப் பின்னர் எந்தக் காலத்திலும் உயர் நீதிமன்ற நீதிபதியாக இருக்கும் போது கூட நான் போகவில்லை. காரணம், எங்களுடைய சுதந்திரம் எங்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை என்று அன்றே சொன்னேன்.

இல்லை இல்லை. எங்களுக்கு இனி எல்லாம் கிடைக்கும். இந்த நல்லாட்சி அரசாங்கத்தில் எல்லாம் கிடைக்கும் என்று சொன்னார். அவருடைய மனதில் நம்பிக்கை இருந்தது, நான் அவரைக் குறை கூறவில்லை. அவருடைய பார்வையைச் சொன்னேன். தம்பி சுமந்திரனை வருவீர்களா என்று கேட்டவுடன் அவர் சரியென்றார். இரண்டு பேரும் மறுநாள் சென்றார்கள். நான் போகவில்லை.

இதனை எதற்காகக் கூறுகின்றேன். அவர்களுடைய பார்வை சற்று வித்தியாசம். அவர்களுடன் சேர்ந்து பயணித்தால் சிங்களத் தலைவர்கள் நாங்கள் கேட்பதைக் கொடுப்பார்கள் என்ற ஒரு எண்ணம் அவர்களிடமிருந்தது. அது ஒருபோதும் நடக்காது என்பது ஏற்கனவே நான் தெரிந்து கொண்டு வைத்திருந்த விடயம். ஏனென்றால் அவர்கள் கடந்த 100 வருடங்களாகத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தி வந்த விடயங்களை அவர்கள் எவ்வாறு நாங்கள் நன்றாகப் பேசி பல் இழித்ததுடன் விட்டுக் கொடுக்கப் போகின்றார்கள். கொடுக்கமாட்டார்கள்.

ஆகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனுடைய பார்வையினால், நோக்கினால், அவர்கள் என்ன விதமாகப் பிரச்சினையை அணுகியிருக்கிறார்கள் என்ற வழியிலேயே சென்று இதுவரை காலமும், கடந்த 5 வருடங்களாக எங்களுடைய மக்களுக்கு இன்னல்களை ஏற்படுத்திவிட்டார்கள். வருங்காலப் பிரச்சினைகளை மிகைப்படுத்தி விட்டார்கள்.

எனவே அவர்களுக்கு நீங்கள் வாக்களிப்பதால் எந்த வித நன்மையையும் கொண்டு வராது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் என்ற பெயரில் கொண்டுவரப்பட்ட கட்சியை கடந்த 5 வருடங்களாக சுயநல அரசியலில் நுழைத்து விட்டார்கள்.

கிழக்கு மாகாணத்தில் அதிகாரத்தினையும் கைவிட்டு 11 பேர் இருக்கும் போது 7பேர் இருந்த முஸ்லிம் காங்கிரஸூக்கு அதிகாரத்தினைக் கொடுத்து அவர்கள் என்ன செய்தார்கள். தங்களுக்குத் தனிப்பட்ட வகையில் நன்மைகளைப் பெற்றுக் கொண்டு, தமிழ் மக்களுடைய பிரச்சினைகளைக் கேட்டறிவதை செயற்படுத்துவதை மறந்துவிட்டார்கள்.

தங்களுக்கு நன்மைகள் கிடைத்தது என்றவுடன் அவர்களுக்கு வாக்களித்த மக்களை மறந்துவிட்டார்கள். அதிகாரங்களைக் கொடுக்கும் போது பரவாயில்லை எங்களுக்குக் கிடைக்க வேண்டியவைகள் தான் கிடைக்கப் போகின்றன என்ற அந்த எண்ணத்தில் அவர்கள் வாழ்ந்து வந்தார்கள்.

ஆகவே கடந்த 5 வருடங்களில் கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் நிலை மிகவும் மோசமாக மாறிவிட்டது. நாங்கள் அதற்குரிய நடவடிக்கைகளை அப்போதே எடுத்திருக்க வேண்டும். ஆனால் காலம் தாழ்த்தி விட்டோம்-என்றார்.

## எம் பின்னால்...

திருகோணமலையில் நடைபெற்ற சந்திப்பொன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச சமூகம் எம் பின்னால் நிற்கின்றது. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் முழுமையாகப் பின்னால் நிற்கின்றார். கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்று இரண்டு நாட்களில் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் இலங்கைக்கு விஜயம் செய்து தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் நீதியான, சமத்துவமான, கௌரவத்துடன் கூடிய தீர்வொன்று முன்வைக்கப்படவேண்டும் என கலந்துரையாடினார். அதன் பின்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்குச் சென்றபோது இந்தச் செய்தி அவர்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது-என்றார்.

## திட்டமிட்டபடி...

கொழும்பு - ஜிந்துப்பிட்டிப் பகுதியில் சுயதனிமைப்படுத்தலில் இருந்த ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையிலேயே தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் கொரோனா பரவலின் இரண்டாவது அலை ஏற்படும் என்று நாம் நம்பவில்லை.

திட்டமிட்டபடி தேர்தல் நடைபெற வேண்டுமானால், பொது மக்கள் அனைவரும் சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றுவதே சிறந்தது. நெருக்கடியான, அச்சுறுத்தலான இந்தச் சூழ்நிலையில் நாம் ஏன் வாக்களிக்க வேண்டும் என்று யாரும் எண்ணி விடக் கூடாது.

நாட்டு மக்கள் அனைவருக்கும், உயிருக்கு அடுத்ததாக உள்ள பெறுமதியான உரிமை வாக்குரிமையாகும். எவ்வித பேதமும் இன்றி மக்களுக்குக் கிடைக்கப் பெறுவது வாக்குரிமை மாத்திரமே. அவ்வாறான வாக்குரிமையைப் புறக்கணிப்பது தனது முகத்தின் மீதுள்ள கோபத்தில் முக்கை வெட்டிக் கொள்வதைப் போன்றதாகும்.

எனவே அனைவரும், வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்று தாம் விரும்பும் வேட்பாளர்களுக்கு வாக்களித்து ஜனநாயகத்துக்குப் பங்களிக்கவேண்டும்-என்றார்.

## சிறைகளுள்...

சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

வெலிக்கடை மகளிர் சிறைச்சாலையில் நடத்தப்பட்ட சோதனையில் 28 கையடக்க தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளன.

## சு.கவிலிருந்து...

வீழ்ச்சி ஏற்படவில்லை. எதிர்காலத்தில் கட்சியின் ஆலோசகராக நான் செயற்பட்டு இளைஞர் பரம்பரைக்குக் கட்சியை ஒப்படைக்கவுள்ளேன்.

சம்பிரதாய அரசியலில் இருந்து மீண்டு கல்வியறிவு மிக்க புதிய சிந்தனைகளை உடைய இளைஞர்களுக்கு சுதந்திரக் கட்சியை பாரப்படுத்தவுள்ளேன் -என்றார்.

## 2,165 பேர்...

கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்களில் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட 480 பேரும், ஏனைய குற்றங்களை இழைத்த 800 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் 221 பேரும், கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் 224 பேரும், ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 12 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஆயுதங்கள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 04 பேரும், சட்டவிரோத மதுபானம் வைத்திருந்த குற்றச்சாட்டில் 424 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சுற்றிவளைப்புகளில் 05 ரிபிட்டர் வகை துப்பாக்கிகள், ஒரு கைக்குண்டு ஆகியனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்தோடு, 4 ஆயிரத்து 580 லீற்றர் சட்டவிரோத மதுபானமும் கைப்பற்றப்பட்டுள்ளது எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## ஏழு பேருக்கு...

மேற்கொள்ளப்படும் விசாரணைகளுக்கு அமைவாக இவர்களுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

2008ஆம் ஆண்டு 11 இளைஞர்களைக் கடத்தி காணாமல் ஆக்கிய சம்பவம் தொடர்பில் பொய்யான சாட்சிகளைத் தாக்கல் செய்து தனக்கு எதிராக மேல்நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தனர் என்று தெரிவித்து டி.கே.பி. திஸாநாயக்கவால் குறித்த முறைப்பாடு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாட்டின் பிரதிவாதிகளாக கடந்த அரசின் அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் உள்ளிட்ட 7 பேருக்கு எதிர்வரும் 15 ஆம் திகதி ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு தெரிவித்து இவ்வாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

## உள்நாட்டு...

மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இரவு இயக்கச்சியில் இடம்பெற்றது என்று பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த தங்கராசா தேவதாசன் (வயது-43) என்பவரே படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மீன் ரின்னுக்குள் சி-4 வெடிமருந்தைப் பயன்படுத்தி நாட்டு வெடிபொருள் செய்தபோதே வெடிவிபத்து ஏற்பட்டுள்ளது என்று விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது என்று பளை பொலிஸார் கூறினார்.

ஈழநாடு
Eelanadu
05.07.2020 சனிக்கிழமை

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

gmail:- eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 492 7805

# சரணடைந்தவர்களை கொல்லுவதற்கு உத்தரவிட்டவர்?

இறுதி யுத்தத்தை வழிநடத்திய இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, சரணடைந்தவர்களை கொல்லுவற்கு உத்தரவிடப் பட்டதாகவும், அது தொடர்பான ஒலிநாடா தன்னிடம் இருப்பதாகவும் தெரிவித்திருக்கின்றார். அண்மையில் காணாமல் போனவர்கள் எவரும் உயிரோடு இல்லை என்று தற்போதைய இராணுவத் தளபதி சவேந்திரசில்வா தெரிவித்திருந்தார். உண்மையில் தேர்தல்களின் போது பேசப்படும், இந்த விவகாரம் பின்னர் அடுத்த தேர்தலின் போதுதான் மீண்டும் தூசுதட்டப்படும். தமிழ்த் தலைமைகள் என்போரின் நிலைமையும் இதுதான்.

இன்று, இவ்வாறு கூறும் பொன்சேகா, மைத்திரி - ரணில் அரசாங்கத்தில் அமைச்சராக இருந்தவர். அன்றைய சூழலில், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர்ச்சியாக போராட்டங்களில் ஈடுபட்டுவந்தனர். ஆனால் அப்போது இராணுவத்தின் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்க பொன்சேகா தயாராக இருக்கவில்லை. மாறாக இராணுவம் ஒருபோதும் தவறு செய்யவில்லை என்றே கூறிவந்தார். இப்போது கூறுவதை அப்போதே கூறி, அதற்கான ஆதாரங்களை வெளிப்படுத்தியிருக்கலாமே! ஆனால் அவர் செய்யவில்லை. இப்போது தனது அரசியல் எதிரிகள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கின்ற சூழலில் சரணடைந்தவர்களை கொல்லுவதற்கு உத்தரவிடப்பட்டதாக கூறுகின்றார்.

உண்மையில் அவ்வாறான ஆதாரங்கள் இருந்திருப்பின் கடந்த ஆட்சிக் காலத்தில் அதனடிப்படையில் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்து விசாரணை செய்திருக்கலாம். ஆனால் அதற்கான எந்தவொரு முயற்சியும் எடுக்கப்படவில்லை. 2015இல் இணை அனுசரணை வழங்கி ஏற்றுக்கொள்ளப்பட்ட ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் பிரேரணையை அமுல்படுத்துவதற்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் ரணில் அரசாங்கம் எடுத்திருக்கவில்லை.

இறுதி யுத்தத்தின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர் பில் விசாரிப்பதற்கென, கலப்பு நீதிமன்றப் பொறிமுறை ஒன்றை, 2015 -பிரேரணை வலியுறுத்தியிருந்தது. ஆனால் அரசாங்கம் அதனை நடைமுறைப்படுத்துவதை நிராகரித்தது. வாக்குறுதியை மீறியது. ஒருவேளை அவ்வாறானதொரு பொறிமுறை ஏற்படுத்தப்பட்டிருந்தால் ஆட்சி மாறினாலும் அது புதிய அரசாங்கத்திற்கு ஒரு நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கும் ஆனால் இராணுவத்தை குற்றம்சாட்டும், தண்டிக்கும் எந்தவொரு கோரிக்கைக்கும் மைத்திரி- ரணில் அரசாங்கம் இடமளிக்கவில்லை. அப்போது அமைதியாக இருந்துவிட்டு இப்போது பொன்சோ கூறும் தகவலை எவர் நம்புவார்? எவர் பொருட்படுத்துவார்? இன்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்னை வெறும் தேர்தல் கால பண்டமாகிவிட்டது. அனைவரும் காணமால் ஆக்கப்பட்வர்களை வைத்து அரசியல் செய்கின்றனர். இரண்டு பக்கத்திலும். உண்மையிலேயே அவ்வாறானதொரு ஒலிநாடா இருந்தால் அதனை முதலில் பொன்சேகா வெளியிடட்டும் பார்ப்போம்!

# க.பொ.த உயர்தரப் பரீட்சையை செப்ரெம்பர் 7 இல் நடத்தலாமா?

## ஒன்லைன் கருத்துக் கணிப்பு ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 04

கல்விப் பொதுதராதர உயர்தரப் பரீட்சையை நடத்தும் திகதி குறித்து தீர்மானிக்கப் பொதுமக்களின் அப்பிராயங்களை, இணையத்தளம் வழியாக அறிந்து கொள்ள கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

செப்ரெம்பர் 7ஆம் திகதி பரீட்சையை நடத்தலாமா என்பதை தீர்மானிக்க இணையத் தளம் வழியாக கணக்கெடுப்பு ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட கணக்கெடுப்பு ஜூலை 10ஆம் திகதி வரை இடம்பெறும்.

செப்ரெம்பர் 7ஆம் திகதி உயர்தர பரீட்சையை நடத்துவதென திருத்தப்பட்ட அறிவிக்கை கல்வியமைச்சு அறிவித்துள்ளது. எனினும், அந்த திகதியிலும் மாற்றம் செய்யப்பட வேண்டுமென்ற கோரிக்கைகள் வலுத்ததையடுத்து, இந்த கணக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# கொழும்பு துறைமுகத்தின் இரண்டு முனையங்கள் தொடர்பில் ஆராய ஜனாதிபதியால் குழு நியமனம்

கொழும்பு, ஜூலை 05

கொழும்புத்துறைமுகத்தின் ஜயா கொள்கலன் முனையம் மற்றும் கிழக்கு முனையத்தின் அபிவிருத்தித் திட்டம் தொடர்பில் ஏற்பட்டிருக்கும் சிக்கலை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஐவர் அடங்கிய குழுவொன்றை நியமித்துள்ளார்.

துறைமுகம் மற்றும் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே.மாயதுன்னே குழுவின் தலைவராக பெயரிடப்பட்டுள்ளார்.

மேலும் கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்புஅமைச்சின் செயலாளர் எம்.பி.டி.யு.கே.மாப்பா பத்திரன, வீதி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் செயலாளர் ஆர்.டப்ளியூ.ஆர் பிரேமசிறி, மின்சாரம் மற்றும் கணிய வள அமைச்சின் செயலாளர் வசந்தா பெரேரா, இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவர் ஓய்வுப் பெற்ற ஜெனரல் ஆர்.எம்.தயா ரத்னாயக்க ஆகியோர் குழுவின் ஏனைய அங்கத்தவர்களாவர்.

மேலும் இந்த குழு எதிர்வரும் 45 நாட்களுக்குள் குறித்த நிரல் அமைச்சுக்கள் மற்றும் தரப்பினர் தொடர்பாக அறிக்கையை முன்வைக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

# மஹிந்தானந்தவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை வேண்டும்

## வலியுறுத்துகிறார் விஜித ஹேரத்

கொழும்பு, ஜூலை 04

2011 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ண கிரிக்கெட்போட்டியின் இறுதிப் போட்டிகாட்டிக்கொடுக்கப்பட்டதாகக் குற்றம் சுமத்திய முன்னாள் விளையாட்டுத் துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேக்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் கோரிக்கை விடுத்துள்ளார்.

குற்றச்சாட்டு தொடர்பாக விளையாட்டுத் துறை அமைச்சு செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை நடத்திய விளையாட்டு குற்றங்கள் தொடர்பான விசேட பொலிஸ் விசாரணைப் பிரிவு, போட்டி காட்டிக் கொடுக்கப்பட்டமைக்கான போதுமான சாட்சியங்கள் இல்லை எனக் கூறி விசாரணைகளை நிறைவு செய்தது எனவும் அவர் கூறியுள்ளார்.

அப்படியானால், முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் வேண்டும் என்றே பொய்யான குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். அவரது இந்த குற்றச்சாட்டு காரணமாக நாட்டுக்கு பெரிய புகழை தேடிக்கொடுத்த விளையாட்டு வீரர்களின் நற்பெயருக்குப் பாதிப்பு மாத்திரமே ஏற்பட்டுள்ளது. ஏதோ ஒரு வகையில் அந்தப் போட்டி காட்டிக்கொடுக்கப்பட்டிருக்குமாயின் விளையாட்டுத்துறை அமைச்சராக இருந்த மஹிந்தானந்த அளுத்கமகே அதற்கு பொறுப்புக் கூற வேண்டும். இதனால், இந்தக் குற்றச்சாட்டில் இருந்து அவர் தப்பிக்க முடியாது.

பல ஆண்டுகள் கடந்த நிலையில், அரசியல் நோக்கத்துக்காகவே அவர் இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளதாகவும் விஜித ஹேரத் குறிப்பிட்டார்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



செய்திகள்

## ஐந்து ஆண்டு காலப் பகுதியில்

# கட்சியை வளர்ப்பதிலேயே கவனம் செலுத்தினார் விக்கி

### ஜே.வி.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை 05
5 ஆண்டு காலப்பகுதியில் வடக்கில் அபிவிருத்திகளை, மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யாது கட்சியை வளர்ப்பதிலேயே முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் கவனம் செலுத்தினார் என மக்கள் விடுதலை முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இந்தக் குற்றச்சாட்டை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரட்நாயக்க முன்வைத்துள்ளார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முற்பகல் கிளிநொச்சியில் அமைந்துள்ள மக்கள் விடுதலை முன்னணி அலுவலகத்தில் இடம்பெற்றது.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று நாட்டில் உள்ள செல்வந்தர்கள் வளர்ந்தவாறு செல்கின்றனர். ஏழைகள் மேலும் ஏழைகளாகவே செல்கின்றனர். அதனாலேயே பாரிய சவால்களுக்கு மக்கள் முகம் கொடுக்கின்றனர். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டம் வறுமை நிலைக்கு சென்றமைக்கு இதுவும் பிரதானமாக உள்ளது.

கல்வியில் வடக்கு மாகாணம் பின்னிலைக்குச் சென்றுள்ளது. வசதிகள் கொண்ட மாவட்டம், செல்வந்தர்களின் பிள்ளைகள் கல்வி கற்கும் பாடசாலைகளுக்கான வளங்கள் அதிகரித்து கொடுக்கப்படுகின்றன. நீச்சல் தடாகம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளும் அமைத்து கொடுக்கப்படுகின்றன. ஆனால் வறிய பகுதிகளில் உள்ள பாடசாலைகளுக்கு வளங்கள் பெற்று கொடுக்கப்படுவதில்லை.

தற்போது கொரோனா அச்சுறுத்தல் நிறைந்த காலப் பகுதியில் இணையத்தளம் ஊடான கல்வி முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் அதிகளவான பாடசாலை மாணவர்களிடம் சிமார்ட் தொலைபேசிகள் கூட இல்லை. அவர்கள் எவ்வாறு கல்வியைத் தொடர்வது. அதனால் வளப் பற்றாக்குறை உள்ள பிரதேசங்கள் கல்வியில் பின்னிலைக்குச் செல்லவேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றன.

5 ஆண்டு கால வடக்கு மாகாண சபையினால் மக்களுக்கு என்ன பெற்றுக் கொடுக்க முடிந்தது. தொழிற்சாலைகளை அமைத்து கொடுத்திருக்க முடியும், மக்களின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப கூடிய திட்டங்களை நடைமுறைப்படுத்தியிருக்க முடியும். ஆனால் அவை மேற்கொள்ளப்படவில்லை. அதிகளவான பணம் திறைசேரிக்கு திருப்பி அனுப்பப்பட்டது. விக்னேஸ் வரன் அந்த 5 ஆண்டு காலப்பகுதியில் தனக்கான கட்சி ஒன்றை அமைப்பது தொடர்பிலேயே கவனம் செலுத்தினார். மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அவரும், வடக்கு மாகாண சபையும் எதனையும் செய்திருக்கவில்லை-என்றார்.



# கார் மோதி மாடு பலி!

வவுனியா, ஜூலை 05
புளியங்குளம் சன்னாசி பரந்தன் பகுதியில் மாடொன்றைக் மோதிக் கொன்றுள்ளார் கார்ச் சாரதி.

விபத்தில் கார் கடுமையான சேதமடைந்தது. சாரதி தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளார்.

நேற்று முற்பகல் 10 மணியளவில் முல்லைத்தீவிலிருந்து வவுனியா நோக்கி வந்த கார் வீதியின் எதிரே சென்ற மாட்டை மோதித் தள்ளியது. விபத்தில் மாடு உயிரிழந்தது.

விபத்தில் கார் கடுமையான சேதமடைந்த நிலையில் அதன் சாரதி எவ்வித காயங்களுமின்றி உயிர் தப்பியுள்ளார்.

விபத்து தொடர்பாக புளியங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# தவறிழைத்தது பொலிஸ்!

### மஹிந்தானந்த பாய்ச்சல்



கொழும்பு, ஜூலை 05
2011 உலகக் கிண்ண இறுதி ஆட்டத்தில், ஆட்டநிர்ணயச் சதி இருந்ததாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு ஆதாரமற்றது என்று விசாரணைகள் கைவிடப்பட்டுள்ள நிலையில், இந்த விடயத்தில் பொலிஸார் தவறிழைத்துவிட்டனர் என முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தாநந்த அளுத்கமகே குற்றம்சாட்டியுள்ளார்.

2011 உலகக் கிண்ண இறுதி ஆட்டத்தில் ஆட்ட நிர்ணய சதி இடம்பெற்றதாக முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தாநந்த அளுத்கமகே கூறியிருந்த குற்றச்சாட்டு குறித்து, விளையாட்டுத்துறை அமைச்சின் விசேட பொலிஸ் விசாரணைப் பிரிவு, விசாரணைகளை நடத்தி வந்தது.

உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் ஆட்ட நிர்ணய சதி இடம்பெற்றதற்குப் போதிய ஆதாரங்கள் இல்லை என்பதனால் அந்த விசாரணைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன நேற்று முன்தினம் மாலை அறிவித்தார்.

இதையடுத்து, தான் கூறிய குற்றச்சாட்டு குறித்த விசாரணையில் பொலிஸார் முற்றிலும் தவறு செய்துள்ளனர் என்று, முன்னாள் மஹிந்தாநந்த அளுத்கமகே குற்றம்சாட்டியுள்ளார்.

விசாரணைகள் கைவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்ட பின்னர், செய்தியாளர்களைச் சந்தித்த அவர், முறையான விசாரணையை நடத்துமாறு ஜனாதிபதி கோட்டாபயவிடம் கோரியிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

# கைபேசியில் 5மணிநேரம் கேம் விளையாடிய தமிழ் வர்த்தகர் மூளை நரம்பு வெடித்துச் சாவு!



கொழும்பு, ஜூலை 05
ஐந்து மணி நேரத்திற்கும் மேலாக கைத்தொலைபேசியில் வீடியோ கேம் விளையாடிக்கொண்டிருந்தவர் தமிழ் வர்த்தகர் ஒருவர் மூளை நரம்பு வெடித்து உயிரிழந்துள்ளார்.

கொழும்பு, கிரான்ட்பாஸ் பிரதேசத்தை சேர்ந்த 30 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவர் கடந்த 29ஆம் திகதி இரவு 9 மணி முதல் அதிகாலை 2 மணி வரை அறையில் தனது கைத்தொலைபேசியில் விளையாடிக் கொண்டிருந்தபோது இந்த மரணம் ஏற்பட்டுள்ளது.

மரணம் தொடர்பில் திடீர் மரண பரிசோதகர் இரேஷா தேஷானி முன்னால் இடம்பெற்ற மரண விசாரணையின்போது அவரது 30 வயதுடைய மனைவி ஆனந்தன் தர்ஷிகா இவ்வாறு சாட்சியளித்துள்ளார்.

"எங்களுக்கு ஒரு பிள்ளை உள்ளது. கணவன் வர்த்தகர். எனக்குத் தெரிந்த அளவில் அவருக்கு அல்சர் வருத்தத்தை தவிர வேறு ஒரு நோயும் இல்லை. இரவு 9 மணியளவில் தனது கையடக்கத் தொலைபேசியில் விளையாடிக் கொண்டிருந்ததை அவதானித்தேன்.

அதனை நிறுத்தி விட்டு உறங்குமாறு நான் கூறினேன். அதைக் கேட்காமல் விளையாடிக் கொண்டிருந்தார். அடுத்த நாள் அதிகாலை இரண்டு மணியளவில் திடீரெனச் சத்தம் ஒன்று கேட்டது. அங்கு சென்று பார்த்த போது மூக்கு, வாயில் இரத்தம் வடிந்த நிலையில் கணவர் விழுந்து கிடந்தார். உடனே அம்புலன்ஸ் வண்டிக்கு அழைப்பேற்படுத்தி வைத்தியசாலைக்கு கொண்டு சென்றோம். அவர் உயிரிழந்துள்ளார் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். 5 மணி நேரத்துக்கும் அதிகமாக தொலைபேசியில் விளையாடியமையால் அதிக இரத்த அழுத்தம் ஏற்பட்டு மூளை நரம்பு வெடித்தமையினால் அவர் உயிரிழந்துள்ளார்." என்று வைத்தியர் தெரிவித்துள்ளார்.

# மூன்று வேட்பாளர்களுக்கு ராணுவத்தால் அச்சுறுத்தல்

### சமத்துவ சோசலிச கட்சி முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 05
இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் என்று கூறிக் கொண்டு சிலர் யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிடும் தமது கட்சியின் மூன்று வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் தனிப்பட்ட விவரங்களை கேட்டு அச்சுறுத்தியுள்ளனர் என, சமத்துவ சோசலிசக் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

சமத்துவ சோசலிச கட்சியின் பொதுச்செயலாளர் விஜே டயஸ் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பின்போதே இவ்வாறு குற்றம்சாட்டியுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமல் குணரத்னவுக்கு முறைப்பாடு செய்துள்ளதாகவும், அவருக்குக் கடிதம் அனுப்பி இரண்டு வாரங்களாகியும், எந்தப் பதிலும் கிடைக்கவில்லை என்றும், சமத்துவ சோசலிச கட்சியின் பொதுச்செயலாளர் விஜே டயஸ் கூறினார்.

செய்திகள்

# தாய்லாந்துக்கு அனுப்பியே கருணாவுக்குப் புனர்வாழ்வு

## ரஞ்சித் மத்தும பண்டார கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 05

நாங்கள்தான் கருணாவை தாய்லாந்துக்கு அனுப்பி, புனர் வாழ்வுக்கு உட்படுத்தினோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளராக களமிறங்கியுள்ள ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

கருணா அம்மான் வெளியிட்டுள்ள சர்ச்சையான கருத்து தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் இதுவரை முன்னெடுக்கப்படாமை தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்-

கருணாவை நாங்கள் சீர்திருத்தினோம். அதன்பின்னரே அவர் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து விலகினார்.

நாங்கள் கருணாவுக்கு வேறு எதனையும் செய்யவில்லை. ஆனால் தற்போது பொதுஜன பெரமுனவில் உள்ளவர்கள்தான் அவரை அரசியல்வாதியாக மாற்றியுள்ளனர்.

எனினும் கருணா அம்மான், தனது அறிக்கை தொடர்பாக உண்மையான விளக்கத்தை கட்டாயம் வழங்க வேண்டும். நாம், ஆட்சிக்கு வந்தவுடன் அவரை நீதிமன்றத்தில் நிறுத்துவோம்-என்றார்.



# வாகனக் கதவை திடீரென திறந்த சாரதியால் முதியவர் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஜூலை 05

யாழ்.நல்லூர் கோவில் வீதியில் நேற்று இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் 60 வயது மதிக்கத்தக்க வயோதிபர் ஒருவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வீதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த காரில் இருந்தவர் சாரதிப் பக்க கதவைத் திறந்து கொண்டு இறங்க முற்பட்டுள்ளார்.

அவர் அவதானம் இல்லாமல் திடீரெனக் கார்க் கதவைத் திறந்ததால் பின்னால் வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் கார்க் கதவுடன் மோதியது.

இந்த விபத்தில் 60 வயது மதிக்கத்தக்க வயோதிபர் தலையில் படுகாயமடைந்த நிலையில் மயக்கமுற்றுள்ளார். அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்ட முதியவர் ஓட்டோ ஒன்றில் ஏற்றப்பட்டுச் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இந்த விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை யாழ். பொலிஸார் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விசேட கடமையில் 2000 பொலிஸார்!

கொழும்பு, ஜூலை 05

கொரோனா தொடர்பில் வழங்கப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றாத, முகக் கவசங்களை அணியாதவர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு மேல் மாகாணத் துக்குள் மாத்திரம் 2000 பொலிஸார் விசேட கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பொலிஸ் சீருடைக்கு மேலதிகமாக சிவில் உடையிலும் புலனாய்வு அதிகாரிகளும் இந்த விசேட கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

சுகாதார வழிகாட்டல்களை உரிய முறையில் பின்பற்றாதவர்கள் மற்றும் முகக் கவசங்கள் அணியாதவர்கள் தொடர்பில் பொது மக்கள் மத்தியில் அசமந்த நிலை காணப்படுவதாகக் கிடைக்கப்பெற்ற தகவல்களை அடுத்தே இது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு பதில் பொலிஸ்மா அதிபர் சந்தன விக்ரமரத்ன சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கினார் என அவர் மேலும் கூறினார்.

இதேவேளை, முகக் கவசங்களை அணிந்த நிலையில் குற்றச் செயல்கள் அல்லது சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் தொடர்பிலும் பொலிஸார் மேற்படி விசேட பொலிஸ் குழுக்கள் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளையும் மேற்படி குழு மேற்கொண்டுள்ளது.



# மக்களின் பிரச்னை பட்டினியே!

## கூறுகிறார் ரணில்

கொழும்பு, ஜூலை 05

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள மிகப்பெரிய பிரச்சினை பட்டினியே தவிர நாட்டின் பிளவு அல்லவென ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

பொதுக்கூட்டமொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்-

நாடு முழுவதிலும் உள்ள மக்களில் அதிகமானோர் பட்டினியில் வாடுகின்றனர்.

அனைத்து வணிகங்களும் சரிவடைந்து காணப்படுகின்றன. அதாவது, முச்சக்கர வண்டி வியாபாரத்திலிருந்து பெரு வணிகம் வரை அனைவரும் வருமானம் இழந்துள்ளனர்.

இந்த அரசு, ஆட்சிக்கு வந்து எட்டு மாதங்கள் கடந்துள்ள நிலையில் வேலை இழப்பைத் தடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை-என்றார்.

# மிரட்டுகிறார் விஜேதாஸ



கொழும்பு, ஜூலை 05

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் மத்திய வங்கிப் பிணை முறி மோசடியில் தொடர்புபட்டுள்ள 4 முக்கிய முன்னாள் அமைச்சர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளதாக பொதுஜன பெரமுனவின் கொழும்பு வேட்பாளர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மற்றும் மத்திய வங்கிப் பிணை முறி மோசடி உள்ளிட்ட விவகாரங்களுடன் தொடர்புடைய முன்னைய முக்கிய அமைச்சர்களுக்கு எதிராக இதுவரை காலமும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

கடந்த அரசு இவ்விடயத்தைக் கவனத்தில் எடுக்கவில்லை. எனவே, நாம் பொதுத்தேர்தலில் வெற்றியடைந்ததன் பின்னர் அந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய அமைச்சர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்வோம்-என்றார்.

# வருமானவரி திணைக்களத்தின் பணிகள் மீண்டும் வழமைக்கு

கொழும்பு, ஜூலை 05

தேசிய வருமான வரி திணைக்களத்தின் பணிகள் எதிர்வரும் திங்கட்கிழமையில் இருந்து வழமைக்கு திரும்பவுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

கொவிட் 19 வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாக திணைக்களத்தின் பணிகள் வரையறுக்கப்பட்டிருந்த நிலையில் வரி மதிப்பீடு உட்பட அது தொடர்பிலான பரிசீலனைகள் எதிர்வரும் திங்கட்கிழமையில் இருந்து வழமை நிலையில் முன்னெடுக்கப்படவுள்ளன.

சுகாதார சிபார்சுகளுக்கு அமைவாக அந்தப் பணியை மேற்கொள்ளவுள்ளதாக திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

# 14,000 சிகரெட்டுகளுடன் சீனப் பெண் சிக்கினார்

கொழும்பு, ஜூலை 05

சுங்கவரி செலுத்தாது இறக்குமதி செய்யப்பட்ட 14,000 சிகரெட்டுகளுடன் சீனப் பிரஜை ஒருவர், பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு கல்கிஸை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடற்கரை வீதியில் இந்தக் கைது இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் கல்கிஸை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது. இதன்போது, சிகரெட்டுகளுடன் சீனாவைச் சேர்ந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

55 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதோடு, அவர் தங்கியிருந்த அறையிலிருந்து சிகரெட்டுகளும் கைப்பற்றப் பட்டுள்ளதாகவும், பொலிஸ் ஊடகப் பிரிவு கூறியது.

சந்தேகநபரை கல்கிஸை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

செய்திகள்

# அதிகாரங்கள் கிடைத்தால் நான் மாளிகையில் இருக்கமாட்டேன்!

## ஓட்டமாவடியில் சஜித் பிரேமதாஸ





மட்டக்களப்பு, ஜூலை 05

எனக்கு அதிகாரம் கிடைக்கின்றபோது அலரி மாளிகையிலோ, ஜனாதிபதி மாளிகையிலோ நான் தங்கி இருக்கப் போவதில்லை உங்களில் ஒருவனாக இருந்து நாட்டின் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கப் போகின்றேன் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிடும் வேட்பாளர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலியை ஆதரித்து நேற்று சனிக்கிழமை ஓட்டமாவடியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது கட்சி மற்றைய கட்சி போலில்லை, கடந்த காலத்திலும் நிகழ் காலத்திலும் வெறும் வாய்ச் சாடல்களால் பேசுகின்ற கட்சி இல்லை. எமது கட்சி கடந்த காலத்தில் நீங்கள் எடுத்துக் கொண்ட முயற்சியின் அடிப்படையில் நாங்கள் மற்றக் கட்சிகள் அல்லாது வெல்லுகின்றோமா தோல்வி அடைகின்றோமோ என்று பார்ப்பது கிடையாது. எங்களுக்கு தேவை மக்களை சந்தோசமாக வைத்துக் கொள்ள வேண்டும் எனும் எதிர்பார்ப்புதான்.

இந்த நாட்டில் ஒருசில அரசியல்வாதிகள் என்ன செய்யப் பார்க்கிறார்கள் என்றால் கௌதம புத்தருடைய போதனைகளுக்கு மாறாக இந்த நாட்டில் அவர்களுடைய அரசியல் இலாபத்துக்காக பௌத்த மதத்தில் கூறப்படாத சில விடயங்களைத் திரிபுபடுத்தி இனங்களுக்குடையில் முரண்பாடுகளை தோற்றுவித்து அவர்களுடைய சந்தர்ப்பவாத அரசியலை செய்யப் பார்க்கின்றார்கள்.

புத்த பெருமான் சொன்னார்கள் எல்லோருமே நல்லாக இருக்க வேண்டும், எல்லோரும் நீடூழி வாழவேண்டும் எல்லோரும் சந்தோசமாக வாழவேண்டும் என்றுதான் சொன்னாரே தவிர ஒரு சமூகத்தை மாத்திரம் அவர் கோடிட்டுக் காட்டவில்லை.

உண்மையாக ஒரு பௌத்தன் எந்தவொரு கட்டத்திலுமே ஜாதி, மத பேதத்தை பேச தயாராக மாட்டான், பேச முன்வரமாட்டான். புத்த மதத்தை பொறுத்தவரையில் இந்த நாட்டில் அரசியல் அமைப்பிலே அதற்கென்று கௌரவமான இடம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த நாட்டில் இருக்கின்ற அரசியல் அமைப்புச் சட்டத்தில் பௌத்த மதம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று கூறப்படுகிறது. அதுபோல மற்ற மதங்களையும் கௌரவமாக மதிக்கப்பட வேண்டும் என்று இந்த நாட்டில் இருக்கின்ற அரசமைப்பு மிகவும் தெட்டத்தெளிவாக கூறுகின்றது.

எங்களுடைய வெற்றியின் பின்னால் இந்த நாட்டிலே உள்ள அரசியல் அமைப்புக்கு முரண்படாத வகையில் நாட்டில் உள்ள எல்லா மதங்களையும் விசேடமாகச் சிறுபான்மை சமூகத்தையும் அரவணைத்துக் கொண்டு நாங்கள் எங்களுடைய அபிவிருத்தியையும், வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்க உள்ளோம். எங்களுடைய அரசில் ஜாதி, பேதம் கிடையாது அதற்கான சந்தர்ப்பங்களுக்கு நாங்கள் இடம் கொடுக்கமாட்டோம் என்பதனை மிகவும் தைரியமாக சொல்லுகின்றேன்.

அதேபோன்று எந்தவிதமான பயங்கரவாத நிகழ்ச்சி நிரலுக்கும் இந்த நாட்டில் வாழுகின்ற யாராக இருந்தாலும் அதற்கு நாங்கள் இடம் வழங்கப் போவதில்லை என்பதைக் கூறக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

இந்த நாட்டில் இன, மத பேதமில்லாமல் பயங்கரவாதம் இல்லாமல் அதுபோன்று இனங்களுக்கிடையே முரண்பாடு இல்லாமல் இந்த நாட்டில் நல்லதொரு சமூதாயத்தை உருவாக்கி கொள்வதற்கான வேலைத்திட்டத்தை எங்களுடைய ஆட்சிக்காலத்தில் முன்னெடுப்போம் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இப்பொழுது இந்த நாட்டை ஆட்சி செய்து கொண்டிருகின்ற அரசு இந்த நாட்டை வழிநடத்திக்கொண்டு செல்ல முடியாத ஒரு இக்கட்டான நிலையில் இருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும்.

அவர்கள் ஒன்றில் கெட்டிக்காரர்கள் அவர்கள் முஸ்லிம்களையும் தமிழர்களையும் மூட்டி விடுகிற அல்லது முஸ்லிம்களையும் சிங்களவர்களையும் மூட்டி விடுகிற அல்லது முஸ்லிம்களையும் கிறிஸ்தவர்களையும் மூட்டி விடுகிற அல்லது எல்லா இன மக்களையும் மூட்டி விட்டு வேடிக்கை பார்க்கின்ற விடயத்தில் அவர்கள் வல்லவர்கள் என்பதை உங்களுக்கு நான் சொல்லத் தேவையில்லை.

உங்களுக்கு நன்றாகத் தெரியும் கொரோனா வைரசை முஸ்லிம் சமூகத்தில் உள்ளவர்கள்தான் பரப்புகிறார்கள் என்கின்ற ஒரு புரளியைக் கிளப்பிவிட்டு அதற்குள்ளே அவர்கள் அரசியல் செய்யப் பார்த்தார்கள் இந்த நாட்டிலே முஸ்லிம் பிரஜைகள் மிகவும் மோசமானவர்கள் என்று சொல்லப் பார்த்தார்கள்- என்றார்.

இந்நிகழ்வில், முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி, மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி, ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஐ.ரீ.அஸ்மி உட்பட பல முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

# வவுனியாவில் அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களுக்கிடையே தர்க்கம்



வவுனியா, ஜூலை 05

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் வி.எஸ். சிவகரன் தலைமையில் இடம்பெற்ற மக்கள் மன்றம் நிகழ்வில் குழப்பகரமான நிலை ஏற்பட்டபோதிலும் அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களுக்கிடையில் கைகலப்பு தவிர்க்கப்பட்டுள்ளது.

வவுனியா நகரசபை மண்டபத்தில் தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் நடந்த கலந்துரையாடலில் நாடாளுமன்றத் தேர்தலில் பங்கேற்கும் கட்சிகளின் வேட்பாளர்கள், சிவில் பிரதிநிதிகள் மற்றும் மக்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது ஆரம்பத்தில் நெறியாள்கை செய்த வி. எஸ். சிவகரன், சிவில் பிரதிநிதிகளாகக் கலந்துகொண்டுள்ள சின்மயா மிசன் சுவாமி தவத்திரு வேலன் சுவாமி, பல்கலைக்கழக மாணவன் வி.சாரங்கன், சமூக ஆர்வலர் செ. சுதாகரன் ஆகியோரும் வேட்பாளர்களாக கலந்துகொண்ட காதர் மஸ்தான், சிவசக்தி ஆனந்தன், ப.உதயராசா, சிவ. கஜேந்திரகுமார் ஆகியோர் மாத்திரமே கருத்துக்களை முன்வைப்பார்கள் எனத் தெரிவித்திருந்தார்.

இதன்போது கருத்துக்களை முன்வைக்க அனுமதியளிக்கப்பட்டவர்கள் தமது கருத்துக்களை முன்வைத்தபோது சிவகரனால் இடையிடையே கேள்விகள் கேட்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் அனைத்து தரப்பினரும் உரையாற்றி இறுதியில் காதர் மஸ்தான் உரையாற்றி முடிந்தபோது சிவகரனால் கேள்விகள் கேட்கப்பட்ட பின்னர் பார்வையாளர்களாக இருந்தவர்கள் மத்தியில் இருந்து தமிழ் மக்கள் கூட்டணியின் முன்னாள் வவுனியா மாவட்ட அமைப்பாளர் காதர் மஸ்தானை நோக்கி கேள்விகளைக் கேட்டார்.

மக்கள் கேள்வி கேட்பதற்கு அனுமதி இல்லை எனத் தெரிவித்திருந்த நெறியாளர், இதன்போது அமைதியாக இருந்து அவருக்கு அனுமதி அளித்திருந்தார்.

அந்த நபர் மஸ்தானை நோக்கி காணாமற்போனோர் விடயம், அரசியல் கைதிகள் விடயம் தொடர்பாக கேள்விகளைக் கேட்டபோது மஸ்தான் அதற்குப் பதிலளித்திருந்தார்.

அடுத்து ஒரு முஸ்லிமாவது தமிழ் வேட்பாளருக்கு வாக்களித்தால் இனவாதம் பற்றிப் பேச்சே வராது எனத் தெரிவித்து தனது கேள்வியை தொடர முட்பட்டபோது, காதர் மஸ்தானுடன் வந்தவர்கள் இனவாத கருத்தை முன்வைக்கின்றனர் என நெறியாளரிடம் தமது முறைப்பாட்டை முன்வைத்தார்கள்.

இதன்போது மேலும் சிலர் மஸ்தானை நோக்கி கேள்வி எழுப்பியபோது நெறியாளர் அனைவரையும் அமைதி காக்குமாறு தெரிவித்தாலும் குழப்பம் அதிகரித்து எவரையும் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது.

இதன்போது காதர் மஸ்தானின் ஆதரவாளர்களுக்கும் சிறிரெலோ கட்சியின் ஆதரவாளர்களுக்குமிடையில் முரண்பாடு ஏற்படும் நிலை உருவாகியதுடன் சிறிரெலோ கட்சியின் இளைஞரணித் தலைவர் மஸ்தானின் ஆதரவாளர்களை நோக்கிக் கைகளை உயர்த்தியவாறு சென்றிருந்தார். அங்கிருந்த மேலும் இருவருக்கிடையிலும் முரண்பாடு ஏற்பட்டபோது நெறியாளராகச் செயற்பட்ட சிவகரன் இருவரையும் கைகலப்பில் ஈடுபடாதவகையில் செயற்பட்டுப் பிரச்னையை சுமூகமாக்கியிருந்தார்.

இந்நிலையில் காதர் மஸ்தான் சம்பவ இடத்தில் இருந்து வெளியேறி சென்றபோது சிலர் கூச்சலிட்டதுடன் நிகழ்வை முழுமையாக குழப்ப முற்பட்டனர். இறுதியில் சிவகரன் செய்வதறியாது நிகழ்வை முடித்து வைத்தார்.

பாகம் – 34

தயாளன்

# கூட்டமைப்பின் உருவாக்கம் எப்படி நிகழ்ந்தது?



**எழுத்தில் கண்டுபிடிக்க முடியவில்லை கண்ணியத்தை !**

சம்பந்தன் ஐயா யாழ்ப்பாணத்தில் நடந்த மே தினக் கூட்டமொன்றில் ரணிலுடன் இணைந்து சிங்கக்கொடியை ஆட்டினார். அதற்கு இவர் இட்ட தலைப்பு "சம்பந்தன் தூக்கிக் காட்டினார்"

சிரித்திரன் சுந்தரிடம் "உங்களது சஞ்சிகை தொடர்பாக என்ன எதிர் பார்ப்பு உள்ளது?" என ஒருவர் கேட்டார். அதற்கு அவர் அளித்த பதில் "எனது அம்மா எனது சஞ்சிகையைப் படிக்க வேண்டும்" என்பது. அதன் அர்த்தம் அச் சஞ்சிகையின் தரம் தொடர்பானது. இவரது செய்திகளை இவரது மகள் மட்டுமல்ல மனைவியே படிக்கச் சங்கடப்படுவார்.

**பெண்களைச் கொச்சைப்படுத்தும் ஊடகவியலாளர் !**

தீவுப் பகுதியிலிருந்து ஈ.பி.டி.பி யினர் வெளியேறி இருந்தனர். விடயம் அவ் வளவுதான். அதற்கு இவர் இட்ட தலைப்பு.

"தீவுப் பகுதியிலிருந்து ஈபிடிபி வெளியேற்றம் - பெண்கள்சோகம் ஆண்கள் மகிழ்ச்சி"

எந்தப் பெண் தனக்குச் சோகமாக இருக்கிறது என்று இவருக்குத் தொலை பேசியில் சொன்னார் எனப் பத்தி எழுத் தாளர் ஒருவர் வினா எழுப்பி இருந்தார்.

மட்டக்களப்பில் அரச அதிபராக இருப்பவர் திருமதி சாள்ஸ். மட்டக் களப்பில் தற்போது சர்ச்சைக்குரியவராகத் திகழும் ஞானானந்த தேரர் இவரைச் சந்தித்தார். அரச அதிபர் என்றால் மாவட்டத்தின் சகல பிரசை களுக்கும் அவர் தான் நிருவாக ரீதியாகப் பொறுப்புடையவர். பிக்கு விடயத்தில் அவர் எந்த இனம், அவரது அரசியல் நிலைப்பாடு என்ன என்பதையெல்லாம் விடுத்துத் தன்னைச் சந்திக்க வந்திருப்பவரின் கருத்தைத், தேவையைக் கேட்க வேண்டியது அரச அதிபரின் கடமை. இச் சந்திப்புப் பற்றி இவர் இட்ட தலைப்பு "

"அடாவடி பிக்கு மட்டக்களப்பு கச்சேரியில் தன் காதலியை சந்தித்தார்"

ஜூனியர் விகடனில் வெளிவந்த இருவரின் கருத்துக்களை இங்கே தருகிறோம்.

"பெண் முன்னேறிச் சென்றுகொண்டிருந்தால் அவளின் நடத்தையைச் கொச்சைப்படுத்துவது நடக்கிறது. அதற்கு அரசியலும் விதி விலக்கல்ல" கே.அபிநயா (04 .05 .16 இதழ் பக்கம் 48)

"பெண்ணென்றால் எதையும் சொல்லலாம். அதுவும் நடிகையென்றால் எப்படியும் பேசலாம். அதுவும் அழகான நடிகை என்றால் எல்லாக் கற்பனைகளும் வீசலாம். அதுவும் ஆண்களை எதிர்க்கும் பெண்ணாக இருந்து விட்டால் அவள் எல்லாக் கொச்சைப்படுத்தலுக்கும் தகுதி வாய்ந்தவள். அதுவும் அரசியலுக்கு வந்து விட்டால் கேட்கவே வேண்டாம்" ப.திருமாவேலன் ( 24.04.16 இதழ் கட்டுரை - பெரியோர்களே...... தாய்மார்களே)

இதில் உயர் பதவி வகிக்கும் அரசியல் வாதிகளான பெண்களைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தாலும் அதிகாரிகளுக்கும் இதே நிலைதான். தீவுப் பகுதிப் பெண்களாக இருந்தாலும் சரி , அரச அதிபராக இருந்தாலும் சரி, பெண்களைப்பற்றி எவ்வளவு மோசமாக எழுத முடிகிறது இவரால்.

மட்டக்களப்பு மக்களைப்பற்றிய இரா. துரைரத்தினத்தின் கணிப்பு !

அடுத்த தலைப்பு

"காட்டிக்கொடுத்தான் மட்டக்களப்பான் - கழுத்தறுத்தான் மலையகத்தான்" விடயம் இதுதான் - பூஸாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர் ஒருவர் மீது மொனராகலை நீதிமன்றில் வழக்குத் தொடரப் பட்டிருந்தது. பூசா, மொனராகலை என அலைக்கழிக்கப்பட்டதில் அந்த இளைஞருக்கு விரக்தி ஏற்பட்டது. மொனராகலையில் வைத்து தனது கழுத்தை அறுத்துத் தற்கொலைக்கு முயன்றார் அந்த இளைஞர். சம்பவம் நடந்த இடம் மொனராகலை என்ற படியால் அவர் மலையகத்தைச் சேர்ந்தவர் என இவர் எண்ணிவிட்டார். அது தான் கழுத்தறுத்தான் மலையகத்தான் எனக் குறிப்பிட்டார். சரி ! அதற்கேன் காட்டிக்கொடுத்தான் மட்டக்களப்பான் என்று குறிப்பிட வேண்டும்? இவ்வளவுக்கும் அந்த இளைஞன் மட்டக்களப்பு வெல்லாவெளியைச் சேர்ந்தவர்.

**செவ்விக்கு புது விளக்கம் கொடுத்தமை!**

தமிழக சஞ்சிகை ஒன்றுக்கு முன்னாள் போராளி தமிழ்க்கவி செவ்வியொன்றை வழங்கியிருந்தார். அதில் ஒரு கேள்வி - "இறுதிக் கட்ட நிகழ்வுகளில் பொட்டம்மானைக் கண்டீர்களா?" என்பது. அதற்குத் தமிழ்க்கவி தான் காணவில்லை எனப் பதிலளித்திருந்தார். ஒரு வேளை கண்டேன் என்று அவர் பதில் சொல்லியிருந்தால் பின் என்ன ஆகியிருக்கும் நிலைமை? எல்லாச் சிக்கலையும் தவிர்க்கவோ, அல்லது உண்மையில் காணவில்லையோ அது அவரைப் பொறுத்தது. ஆனால் அதற்கு இவரது தலைப்பு

" பொட்டன் ஓட்டம் " எனத் தீர்ப்பளித்திருந்தது.

இந்தப் போராட்டத்தில் குடும்பத்தோடு பலியானவர் பொட்டு ஏற்கனவே 03.11.1990 அன்று மாவட்டபுரம் தச்சன்காட்டுப் பகுதியில் நடைபெற்ற தாக்குதலில் தனது சகோதரி சிவரஞ்சனியை (அருந்ததி ) இழந்திருந்தார். இறுதி யுத்தத்தின் பின்னர் இவர்களது குடும்பத்துக்குச் சொந்தமான வீட்டில் தங்கியிருந்த இவரது சகோதரன் சிவஞானகுமார் அடிக்கடி படையினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். இவர் வீதியில் வரும்போது மரணமுற்றார். இந்த வரலாறுகளை தெரியாமல் பொட்டுவின் வாழ்வைக் கொச்சப்படுத்துவது தமிழ்த் தேசிய உணர்வின் ஒரு துளிகூட இவரது நெஞ்சில் இல்லை என்பதற்கு உதாரணம்.

**எஸ்.பொ. திருட்டுக்கு ஆலோசகரா என குற்றச்சாட்டு!**

மதிப்புக்குரிய எழுத்தாளர் எஸ். பொன்னுத்துரை அவர்கள் ஈழத்தில் அனைவராலும் போற்றப்படுபவர். ஒரு நிகழ்ச்சியில் கலைமகள் ஆசிரியர் கி. வா.ஜகந்நாதன் இவரைப் பேச அழைக்கும் போது ஈழத்தின் ஜெயகாந்தன் என விளித்தார். தன்னை அப்படி அழைத்ததை இவர் ஏற்கவில்லை. தனது உரையின் போது ஜெயகாந்தன் எழுத்துலகுக்கு வருவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரே தாம் எழுத ஆரம்பித்து விட்டதாகக் குறிப்பிட்டார். அத்துடன் "நீங்கள்வேண்டுமானால் ஜெயகாந்தனை இந்திய எஸ்.பொ." என்று அழையுங்கள். எனக்கு ஆட்சேபனையில்லை. தயவு செய்து என்னை ஈழத்து ஜெயகாந்தன் எனக் குறிப்பிட வேண்டாம்" எனச் சொன்னார்.

ஒவ்வொரு கலைஞனுக்கும் கொஞ்சமேனும் வித்துவச் செருக்கு இருக்க வேண்டும். இவ்வாறு "இந்த நூற்றாண்டும் நானும்" என்ற நூலில் கவிஞர் வாலி வலியுறுத்துகிறார். கவிஞர் புதுவை இரத்தினதுரையும் இவ்வாறான கருத்தைக் கொண்டவரே. தமிழகத்தின் பிரபல அரசியல்வாதியொருவரும் "ஈழத் தமிழனில் எனக்குப் பிடித்த விடயம் அவனது திமிர் தான்" என ஒரு சமயம் குறிப்பிட்டதாகத் தகவல் ஒன்று உண்டு.

பொட்டு உட்பட பல்வேறு போராளிகளுக்கு எஸ்.பொ வின் எழுத்து நடை பிடிக்கும். அவ்வாறானவரை திருட் டுக்கு ஆலோசகரா எனக் கேள்வியெழுப்பினார் இவர். சுமார் 35க்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்ட அவரை ஆஸ்திரேலியாவில் இருந்து வெளிவரும் அக்கினிக் குஞ்சு எனும் இணையத்தளம் தமது ஆலோசகர் எனக் குறிப்பிட்டது. இது ஒரு கௌரவமான பதவி - அவ்வளவு தான். ஒரு செய்தி ஒன்றை வெளியிட்டமை தொடர்பான விடயத்தில் எழுத்தாளர்கள் எனக் கூறிக்கொள்ளும் எஸ்.பொ. திருட்டுக்கு ஆலோசகரா என்று கேட்டிருந்தார். எஸ்.பொ வின் மகன் அருச்சுனா ஒரு மாவீரர், (பொன்னுத் துரை மித்திரா,27.04.1986) சிறந்த புகைப் படப்பிடிப்பாளர். திரு. நெடுமாறன் அவர்கள் 1985 ல் ஈழத்துக்கு வந்த போது அவரது நிகழ்ச்சிகள் அனைத்தையும் (மூதூர் வரை) படமாக்கியவர். இவரது பெயரிலேயே புகைப்படப் பிரிவினரின் பணிமனை இயங்கியது. பின்னர் அருச்சுனா புகைப் படக் கலையகம் என ஒன்றை புலிகள் நிறுவினர்,

**எஸ். பொ. குடும்பத்தவரை மறக்காத மாவை !**

இன்னொரு மகன் அநுர - இவர் ஒரு டாக்டர். தீவிரவாதச் சம்பவங்களின் பெயரால் இவரும் முன்னர் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

தமிழரசுக் கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட மாவைக்கு மட்டக்களப்பில் வரவேற்பு அளிக்கப் பட்டது. இந் நிகழ்வில் உரையாற்றிய மாவை அநுர வுடனான அனுபவங் களைப் பகிர்ந்து கொண்டார். சிறை யில் தன் மீது தாக்குதல் நடத்த முனைந் தோருக்கு எதிராக அநுர எப்படிச் செயல்பட்டார், எவ்வாறு தன்னைக் காத்தார் என்பதையெல்லாம் விபரமாக எடுத்துரைத்தார். அநுர வின் குடும்பத்தினர் தன் மீது கொண்ட பாசத்தையும் அவர் நினைவு படுத்தினார். இவ்வாறான வரலாற்றைக் கொண்ட எஸ்.பொ வைத்தான் இரா. துரைரத்தினம் கொச்சைப்படுத்தினார். அவர் போட்ட தலைப்பு .

"ஊடக திருடர்களை அம்பலப்படுத்துகிறோம்"

**வளர்ப்பு முறையை வெளிப் படுத்திய பரதனும் இரா. துரைரத்தினமும்!**

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த முன்னாள் சட்ட மன்ற உறுப் பினர் ரவிக்குமார் ஒரு விடயம் தொடர் பாக கருத்துத் தெரிவித்திருந்தார். "ஈழத்தமிழர்களை அழித்த தமிழ் நாட்டு ரவிக்குமார் போன்ற நாய்களே பொத்தடா வாயை என்று ஒரு பதிலும் இரு நிமிடங்கள் செல்ல "என்னைப் பற்றிக் கதைக்க என்னடா அருகதை இருக்கு பற நாயே " என்று இன்னொரு கருத்தும் தெரிவித்திருந்தார். இரா . துரைரத்தினம் எனப்படும் இவர் இவ்வளவு சாதித் திமிரையும் மனதில் வைத்துக்கொண்டுதான் ஏனையோருக்கும் ஆலோசனை வழங்குவார். முற்போக்குக்காரராகக் காட்டிக்கொள்வார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் அங்கம் வகித்த பரதன் என்பவரைப்பற்றிக் குறிப்பிட வேண்டும். புலிகளின் குரல் நிறுவனத்துக்குப் பொறுப்பாக இருந்தார் இவர். இந்த நிறுவனத்தின் விழாவொன்று யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது. அதில் ஈழ நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினரின் நிகழ்ச்சி நடைபெற்றது. பொருளாதாரத் தடை பற்றி அடுக்கடுக்காகச் சொல்லிக் கொண்டே போன சாம்பசிவக் குருக்கள் சோமாஸ்கந்தசர்மா ஒரு கட்டத்தில் "சவர்க்காரத்துக்குத் தடை" எனக் குறிப்பிட்டார். பக்கத்தில் இருந்தவர் "அப்ப ஊத்தை உடுப்புக்களை என்ன செய்கிறது" என்று கேட்டார். அதற்குச் சர்மா "எல்லாத்தையும் மூட்டையாகக்கட்டி பிரேமதாசாவிடம் அனுப்பச் சொல்லியினம்" எனப் பதிலளித்தார். உடனே ஒரு வினாடியேனும் தாமதிக்காமல் ஒலிவாங்கியைப் பிடித்த பரதன் "இத்துடன் வில்லிசை நிகழ்ச்சி முடிவடைந்து விட்டது" என அறிவித்தார். பிரேமதாச சலவைத் தொழிலாளி வம்சத்திலிருந்து வந்தவர் என்பதைக் கிண்டலடிக்கவே சர்மா அவ்வாறு குறிப்பிட்டார். ஆனால் புலிகளின் நிர்வாகத்தில் அவ்வாறான சிந்தனைகளுக்கோ பேச்சுக்கோ இடமில்லை என்பதை பரதன் செயல் மூலம் காட்டினார். "மங்களம் பாடிவிட்டுப் போகிறோமே" எனக் கேட்டதற்கு அதெல்லாம் "நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்" எனப் பதிலளித்தார் பரதன். பிரபாகரனின் வளர்ப்பு முறை எப்படியிருக்கும் என்பதைப் பரதன் வெளிப்படுத்தினார். லேக்ஹவுஸ் வளர்ப்பு முறை எப்படியானது என்பதை ரவிக்குமார் விடயத்தில் இரா. துரைரத்தினம் நிரூபித்தார்.

(நாளையும் வரும்)

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்



7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : காலைக்கதிரொளி
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : ஹொலிவுட் சுப்பர் 10

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்
1.30 மணி : வீக் என்ட் மூவி
ப்றேவ்




அப் அன்ட் எவே




4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : கலாய்க்கலாம் வாங்க (நேரலை)
6.00 மணி : திரைக்கதம்பம்

**இரவு**
7.00 மணி : ஸ்பொட் லைட்



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சொல்லாடுகளம்
10.00 மணி : பதிவு

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
சூர்யா , சமந்தா மற்றும் பலர் நடிப்பில் அஞ்சான்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN Music HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : டொப் 20
11.00 மணி : ரிவைன்ட் ராகங்கள்

**பகல்**
12.00 மணி : நட்சத்திரம்
1.00 மணி : மஞ்சள் வெயில் மாலையிலே (நேரலை)
3.00 மணி : எங்கேயும் எப்போதும்
4.00 மணி : வீக் என்ட் எக்ஸ்ப்றஸ் (நேரலை)
5.00 மணி : என்றென்றும் இசை

**இரவு**
7.00 மணி : பாட்டு தலைவர்கள்
8.00 மணி : பச்சை கிளி முத்துச்சரம்
9.00 மணி : அண்பிளக் சோ
10.00 மணி : பாடும் நிலா

## கல்வி tv CHANNEL-1

**காலை**
6.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) ஊடகம் மறு ஒளிபரப்பு
7.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி மறு ஒளிபரப்பு
8.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல் மறு ஒளிபரப்பு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) அளவியல்
10.00 மணி :பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) கணக்கீடு
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு)
2.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
3.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
4.00 மணி : தரம் 5 சுற்றாடல்
5.00 மணி : தரம் 5 கணிதம்
6.00 மணி : தரம் 6-9 ஆங்கிலம்

**இரவு**
7.00 மணி : பொது சிங்களம்
7.30 மணி : க.பொ.த சாதாரண தரம் மறு ஒளிபரப்பு

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா - 01
10.00 மணி : புதியதோர் தொடக்கம்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா - 02
6.00 மணி : நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய தெப்போற்சவம் நேரலை



## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : ஆலயப் பாடல்கள்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
11.00 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருகோணமலைத் திருப்பலி
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : மறை வகுப்பு
4.00 மணி : நிதர்சனம்
4.30 மணி - திருகோணமலை திருப்பலி
5.30 மணி - பாடல்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு
12.00 மணி : லுகர் அதான்

**பகல்**
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.07.2020 அன்று வெளியிடப்பட்டது.